DINAKARAN

31 JAN 2023

PAGE 16

தினகரன் புதுவை

R.N.I. Regn.

ஜி20 மாநாட்டில்

# புதுவை பல்கலைக்கழகத்தின் பசுமை ஆற்றல் தொழில்நுட்பத்துறை பங்கேற்பு



▶ புதுச்சேரியில் நடந்த ஜி20 மாநாட்டில் புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

புதுச்சேரி, ஜன. 31: புதுவையில் உள்ள சுகன்யா கன்வென்ஷன் சென்டரில் நடைபெற்ற ஜி20 மாநாடு மற்றும் எஸ்20 அறிவியல் துவக்க விழா மாநாட்டில், ஜி20 மாநாட்டின் கருப்பொருள்களில் முக்கிய பகுதியான தூய்மையான ஆற்றல், பசுமையான எதிர்காலம் என்ற தலைப்பின் கீழ் சுவரொட்டிகளாகவும் காட்சிப் பொருளாகவும் விளக்குவதற்கு புதுவை பல்கலைக்கழகத்தின் பசுமை தொழில்நுட்பத்துறை பங்கேற்றுள்ளது. இத்துறை சார்பில் விவசாயம், உள்நாட்டு மின்-கழிவுகளை பேட்டரியாக மாற்றுதல், 3டி பிரிண்டர்-அதன் பசுமை ஆற்றல் மற்றும் மருத்துவத்துறைகளில் பயன்பாடு, வெப்பமின் சாதனங்கள் மூலம் கழிவு வெப்பத்திலிருந்து மின்சாரத்தை உருவாக்குதல் போன்ற தலைப்புகளின் கீழ் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இத்துறையால் விவசாயம்/உள்நாட்டு மின் கழிவுகளை பேட்டரியாக மாற்றுதல், பசுமை ஹைட்ரஜன் உற்பத்திக்கான ஒளி மின்னழுத்த நீரை பிரித்தல், நெடுஞ்சாலைகளுக்கு செங்குத்தாக பொருத்தப்பட்ட இருமுக சூரிய மின் நிலையம், சுழற்சி முறையில் உயிரியல் பொருளாதாரம், உள்நாட்டு பயன்பாட்டிற்கான சூரியஒளி மின்னழுத்தம், உயிரி அடிப்படையில சோலார் முறையில் இயங்கும் உணவு உலர்த்தி உள்ளிட்ட தலைப்புகளில் சுவரொட்டிகளும் வடிவமைக்கப்பட்டு காட்சிப்படுத்தப்படுகின்றன.

இந்நிகழ்வில் சூரியஒளி மின் நிலையத்தை நிறுவியதில் பல்கலைக்கழகத்தின் சாதனை விளக்கப்பட்டது. ஜி20 மாநாட்டிற்கு வருகை தந்த பிரதிநிதிகளுடன் புதுவை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங் மற்றும் பசுமை ஆற்றல் தொழில்நுட்பத்துறையின் செயல்பாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் நிகழ்வில் துறையின் தலைவர் பேராசிரியர் அருண் பிரசாத், பேராசிரியர் ஏழுமலை ஆகியோர் கலந்து கொண்டனர்.

DINAKARAN

PAGE NO: 07

DATE: 31.01.2023

# PONDICHERRY UNIVERSITY
## PUDUCHERRY

Ref. No. PU/Estt/NT12/UHC/2022-23/ Date: 18.01.2023

## EXPRESSION OF INTEREST INVITED

Expression of Interest is invited from Hospitals / Nursing Homes to run the Pondicherry University Dispensary from 5.00 p.m. to 10.00 a.m. (17 hours) for all the seven days providing medical services to its employees, their dependants and also for the students in the University campus. The other details and minimum health facilities to be provided may be downloaded from the University website "www.pondiuni.edu.in". The last date for receipt of Expression of Interest is **06.02.2023.**

**REGISTRAR (i/c)**